23.01.2026

O.S.No. 321/2021

PW1– கணேசன்– த/பெ. பொன்னுச்சாமி நாடார்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 23.01.2026

<u>குறுக்கு விசாரணை :</u> (3,4 பிரதிவாதி தரப்பில்)

1. நான் விவசாய தொழில் செய்துவருகிறேன். நான் நிலம் வாங்கும் விற்கும் தொழில் செய்துவருகிறேன் என்றால் சரியல்ல, எனது மகன்கள் தான் செய்துவருகிறார்கள். நான் இந்த வழக்கை பிராதுதபசில் சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என கூறி தாக்கல் செய்துள்ளேன். பிராது தபசில் சொத்து எனது தந்தைக்கு கிரையம் மூலம் பாத்தியப்பட்டதாக கட்சி செய்கிறேன். நான் 4 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு என் பெயரை எழுத தெரியும். 1932 ல் எனதுதந்தை கிரையம் வாங்கியதாக எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன்.

2. வா.சா.ஆ.1 ஆவணத்தில் பொன்னுச்சாமி நாடார், நாடாக்கண்ணு நாடார், சிதம்பரநாடார் ஆகியோர் கிரையம் வாங்கியதாக துலங்கும் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் மேற்படி சங்கதிகள் உள்ளதா என்று எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் எனது வீட்டில் உள்ள நபர்கள் படித்து சொன்னார்கள். நாடாக்கண்ணு நாடார், சிதம்பரநாடார் ஆகியோர் எனது பெரியப்பாக்கள். வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட நபர்கள்தான் என் தகப்பனாரின் உடன்பிறந்த சகோதரர்கள் என்பதை காண்பிக்கவோ, அவர்களுக்கு இடையில் பாகப்பிரிவினை நடைபெற்றது என்பதை காண்பிக்கவோ எந்த ஆவணமும் இல்லை என்றால் சரிதான்.

3. வா.சா.ஆ.1 ஆவணத்தில் எந்தெந்த சர்வே எண்கள் உள்ளது என்றால் 1091, 1092, 1093, 1098 மற்றும் 1102 ஆகிய சர்வே எண்கள் உள்ளது. மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டபடி 5 ல் 2 பாகம் தான் ஆவணத்தில் கண்ட மூவருக்கும் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி சங்கதிகள் பிராதில் கூறவில்லை என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது.

4. பிரிவின்றி 5 ல் 2 பாகம் மீதமுள்ள 3 பாகம் யாருக்கு , மேற்படி 2 பங்கை எவ்வாறு பிரித்துக்கொண்டோம் என்ற சங்கதிகள் கூறினால் மட்டுமே சொத்து எங்கள் குடும்பத்திற்கு எவ்வாறு பாத்தியம் என்பது தெரியவரும் என்றால் சரிதான். அவ்வாறு குறிப்பிட்டு கூறாததால் வா.சா.ஆ.1 படி தபசில் சொத்து எங்களுக்கு பாத்தியமில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ 1 தவிர பிராது தபசில் சொத்துக்கள் எனது தந்தைக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்டக்கூடிய வேறு ஆவணம் இல்லை என்றால் சரிதான்.

5. வா.சா.ஆ.1 ஆவணத்தை அனுசரித்து எனது தந்தை பொன்னுசாமி, நாடாக்கண்ணு நாடார், சிதம்பரநாடார் ஆகியோர் இடையே பாகப்பிரிவினை நடைபெறவில்லை என்றால் சரிதான். பாகப்பிரிவினை நடைபெற்றால்தான் யார் யாருக்கு எந்தெந்த பாகங்கள் என்று தெரியவரும் என்றால் எனது பெரியப்பா கிரையம் கொடுக்கும்போது காட்டியுள்ளார்கள். அவ்விதம் காட்டியதாக எனதுபிராதில் துலங்காது என்றால் சரியல்ல.

6. என்னுடைய வழக்குபடி பொன்னுச்சாமி நாடாருக்கு நான், சந்தனமுத்து, குத்தாலிங்கம், சீனியம்மாள் மற்றும் புஷ்பவள்ளி வாரிசுகள். எனதுவழக்கில் பொன்னுச்சாமி நாடாருக்கு மேற்படி நபர்கள் வாரிசுகள் என்பதையும் சொல்லவில்லை என்றால் சரிதான். பொன்னுச்சாமி நாடார் வாரிசுகள் அனைவருக்கும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட சொத்து உரிமையுள்ளது என்றால் சரியல்ல, அவர்களுக்கு வேறு சொத்து ஒதுக்கப்பட்டுள்ளது.

7. எனது பிராதில் பொன்னுச்சாமி நாடாரின் வாரிசுகள் எப்போது எவ்வாறு பாகம் செய்துகொண்டார்கள் என குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். தபசில் சொத்துக்களுக்கு வா.சா.ஆ.1 ஆவணத்தை தவிர வேறு ஆவணம் இல்லை என்பதால் எனது மனைவி பெயருக்கு ஏற்பாடு ஆவணம் (வா.சா.ஆ.2) ஏற்படுத்தினேன் என்றால் சரிதான். ஏற்பாடு ஆவணம் எழுதிக்கொடுத்ததால் மட்டுமே பிராதுதபசில் சொத்தில் எனதுமனைவி உரிமை சித்திக்கும் என்றால் சரிதான், அது தவிர வேறுஉரிமை கிடையாது என்றால் சரிதான்.

8. வா.சா.ஆ.2 ஆவணத்தை அடிப்படையாக கொண்டு நான் பட்டா மாற்றம் விண்ணப்பித்தேன் என்றால் சரிதான். எனக்கு முன்பத்திரங்கள் இல்லாததால் எனக்கு பட்டா மாற்றம் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. பட்டா மாற்றம் செய்வதற்கு வா.சா.ஆ.9 ஆவணத்தை சமர்ப்பித்தேன் என்றால் சரிதான், அதற்கு நான் போதுமான ஆவணங்கள் கொடுக்காததால் தான் பட்டா மாற்றம் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

9. வழக்கு சொத்திற்கும், வா.சா.ஆ.14 முதல் 16 க்கும் எந்த தொடர்பும் கிடையாது என்றால் சரிதான். நான் தற்போது தாக்கல்செய்துள்ள வழக்கில் 1ம் தபசில் சொத்து சர்வே எண்.1098/2ஏ என்றும், 2ம் தபசில் சொத்து 1093/1ஏ என்றும், 3ம் தபசில் சொத்து 1092/2ஜே என்றும் 4ம் தபசில் சொத்து 1093/1ஏ என்றும் குறிப்பிட்டு எனக்கு பாத்தியப்பட்டதாக கட்சி செய்கிறேன். மேற்படி சப்டிவிசன் செய்யப்பட்ட புல எண்களுக்குரிய பட்டா எனதுபெயரில் இல்லை என்றால் சரிதான்.

10. வா.சா.ஆ.1 ஆவணத்தில் காணும் சொத்திற்கு எனதுபெயரில் பட்டா இல்லை என்றால் சரிதான். எதன் அடிப்படையில் நான் தற்போது பட்டா கோருகிறேன் என்றால் பிராது தபசில்சொத்து எனது அனுபவத்தில் சுமார் 100ஆண்டுகளாக இருந்து வருவதால் கோருகிறேன். என்னிடம் காட்டப்படும் பட்டா புல எண்.1093/1ஏக்குரிய தங்கச்சாமி நாடார் பெயரிலுள்ளது என்றால் சரிதான். மேற்படி தங்கச்சாமி நாடார் பிரதிவாதியின் தகப்பனார் ஆவார். யூ.டி.ஆர் ஏற்பட்ட பிழையினால் அவ்வாறு ஏற்பட்டுள்ளது. **மேற்படி பட்டா பி.வா.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

11. மேலும் 1092/2ஜே வும் தங்கச்சாமி நாடார் பெயரில்தான் உள்ளது என்றால், 1092/2ஹெச்– தங்கச்சாமி மற்றும் கைக்கொண்டான் பெயரில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி பட்டா பற்றி எனக்கு நன்கு தெரியும், ஆனால் அது எங்களுடைய பட்டா. **மேற்படி 2 பட்டாக்களும் பி.வா.சா.ஆ.2,3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

12. எனது தந்தை பொன்னுச்சாமி நாடார் பெயரில் பட்டா இல்லை என்றால் சரியல்ல, பட்டா உள்ளது. பிராதில் தபசில்விவரத்தில் குறிப்பிட்டுள்ள எல்கைமாலுக்கும், பிரதிவாதிகளின தகப்பனார் கிரையம் கொடுத்துள்ள சொத்திற்கும் தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. பிராதுதபசில் சொத்திற்கும், எனது தந்தைக்கும் எந்த தொடர்பும் கிடையாது என்றால் சரியல்ல. பிராதுதபசில் சொத்து பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்துவருகிறது என்றால் சரியல்ல, எனது அனுபவத்தில்தான் இருந்துவருகிறது. நான் தான் நெல்பயிர் சாகுபடி செய்துவருகிறேன். எனது மனைவி பெயரில் ஆவணத்தை ஏற்படுத்தவேண்டும் என்ற நோக்கோடு இந்த வழக்கையும் தாக்கல் செய்து பிரதிவாதிக்கு வீண் இடைஞ்சல் செய்துவருகிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி